கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.ச.கண்ணையா, பி.எஸ்சி(விவ), எம்.பி.ஏ.,

ந.க. அ2/13661/2018 நாள்: 20.06.2023

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.கு.மணிகண்டன், இளநிலை உதவியாளர் (பிணையம்) வேளாண்மை விரிவாக்க மையம், காவனூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், திருமுட்டம் – இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அறிபி6/47431/2018, நாள்: 26.09.2018.
2. அரசு ஆணை (நிலை) எண் 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு ( கியூ 1) துறை , நாள்: 26.02.2021.
3. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் க.எண். அறிபி8/16390/2023, நாள்: 23.05.2023.

+++

ஆணை:

சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கட்டுப்பாட்டில் கடலூர், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் வயல்விளக்க அலுவலராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 13.08.2007 அன்று அமரரான திரு.என்.குணசேகரன் அவர்களது வாரிசு/மகன் திரு. கு.மணிகண்டன் அவர்களுக்கு பார்வை (1)–ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆகப் பணிநியமனம் வழங்கி கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ2/9674/17, நாள்: 24.07.2017–ன் வாயிலாக மங்களூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில், மங்களூர், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது. இதன்படி திரு.கு.மணிகண்டன் அவர்கள் மங்களூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக 27.07.2017 முற்பகல் பணியில் சேர்ந்து தற்போது பணி மாறுதலில் திருமுட்டம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில் காவனூர், வேளாண்மை விரிவாக்க மையத்தில் பணிபுரிந்து வருகிறார்.

.....2

Scanned with CamScanner

2) திரு.கு.மணிகண்டன், இளநிலை உதவியாளர் (பிணையம்) அவர்களது ஆவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்தும் மற்றும் பார்வை (2) ல் காணும் அரசு ஆணை மற்றும் பார்வை (3)-ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்கள் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றியும் திரு.கு.மணிகண்டன் அவர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வேளாண்மைத் துறையில் 27.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்வதற்கு அப்பதவிக்குரிய உடல்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3) திரு.கு.மணிகண்டன் அவர்கள் 27.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணயைம்) பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும். மேலும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும். தகுதிகாண் பருவம் முடித்ததைத் தொடர்ந்து இரண்டாவது மற்றும் அதனை தொடர்ந்து காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார்.

ஒம்/-ச.கண்ணையா,
வேளாண்மை இணை இயக்குநர்,
கடலூர்.

பெறுநர்
திரு.கு.மணிகண்டன்,
இளநிலை உதவியாளர் (பிணையம்),
வேளாண்மை விரிவாக்க மையம், காவனூர்,
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், திருமுட்டம்.
**வழி மற்றும் நகல்:** வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், திருமுட்டம்.
நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
பணிந்தனுப்பப்படுகிறது. (அறிபி பிரிவிற்கு)
நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: இருப்புக் கோப்பிற்கு
உதிரி-1

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர்
20/6/23

Scanned with CamScanner